**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கராபுரம்,**

**முன்னிலை. திரு.S.பாஸ்கரன், எம்.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கராபுரம்.**

2019-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06-ஆம் நாள் வெள்ளிக்கிழமை
2049 திருவள்ளுவராண்டு, விகாரி வருடம், கார்த்திகை மாதம் 20-ம் நாள்

**அசல் வழக்கு (O.S.) 443/2009**

| | | |
|---|---|---|
| சங்கராபுரம் வட்டம், தற்காலம் புஷ்பகிரி கிராமத்தில் வசிக்கும் அருளம்பாடி நடேசக்கவுண்டர் குமாரர் சுமார் 56 வயதுள்ள விஸ்வநாதன் | .. | ..வாதி |

**//எதிர்//**

| | | |
|---|---|---|
| 1. சங்கராபுரம் வட்டம், அருளம்பாடி கிராமத்தில் வசிக்கும் காலம்சென்ற காசிநாதன் குமாரர் சுமார் 30 வயதுள்ள வீரமுத்து | .. | ....பிரதிவாதிகள் |
| 2. சங்கராபுரம் வட்டம், அருளம்பாடி கிராமத்தில் வசிக்கும் காலம்சென்ற காசிநாதன் குமாரர் சுமார் 20 வயதுள்ள பச்சமுத்து | .. | |

தாவா "ஏ" ஷெட்டியூல் சொத்து வாதிக்கு பாத்தியமானதென விளம்புகை செய்யும் படிக்கும், தாவா "ஏ" ஷெட்டியூல் சொத்தை காலியாக வாதி வசம் ஒப்புவிக்குமாறு உத்தரவிடும்படிக்கும், தாவா "பி" ஷெட்டியூல் சொத்தில் வாதிக்குரிய 1/2 பாகத்தை பிரித்து ஒப்புவிக்க ஏதுவாக நிலைதீர்ப்பாணை பிறப்பிக்கும் படிக்கும், தாவா செலவுத்தொகை பிரதிவாதிகளால் வாதிக்கு கிடைக்கும் படிக்கு வேண்டி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் 17.09.2008 மற்றும் 01.12.2016 தேதியாகும். இவ்வழக்கின் தாவா மதிப்பு ரூ.15,000.52-ல் வாதி கோரும் தாவா ஏ செட்டியூல் சொத்தின் மதிப்பு ரூ.10000/-த்திற்கான விளம்புகை பரிகாரத்திற்கான தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டப்பிரிவு 25(ஏ)ன் படி ரூ.750.50-ம், தாவா பி செட்டியூல் சொத்தில் வாதிகோரும் ½ பாகத்திற்கான தாவா மதிப்பு ரூ.5000.52க்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டப்பிரிவு 37(2)ன் படி 100.50 ஆக மொத்தம் 851/- செலுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கின் வழக்கு மூலம் சங்கராபுரம் வட்டம், அருளம்பாடி கிராமத்தில் தாவா ஏ,பி செட்டியூல் சொத்துக்களில் எதிர்வாதிகள் மோசடியாக ஆக்கிரமிப்பு செய்த விவரம் வாதிக்கு தெரியவந்த காலமான 25.07.2009 முதல் வழக்குமூலம் உற்பத்தி.

இவ்வழக்கு கள்ளக்குறிச்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 18.09.2008-ம் தேதி அசல் வழக்கு எண்.666/2008-ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, மாண்புமிகு மாவட்ட நீதிபதி, விழுப்புரம் அவர்களின் உத்தரவின் பேரில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 443/2009-ஆக கடந்த 30.03.2009-ம் தேதி கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து கடந்த 02.12.2019-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.ஜெயச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.ஜே.இந்திரசேனன் மற்றும் திரு.ஜீ.கதிரவன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் வழக்காவணங்கள் மற்றும் சாட்சியங்களின் ஆய்வு முடிவில் இருதரப்பு எடுத்துரைத்த வாதத்தை கேட்டறிந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இறுதியாக வாதியின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. தாவா "ஏ" ஷெட்டியூல் சொத்து வாதிக்கு பாத்தியமானதென விளம்புகை செய்யப்படுகிறது.

2. தாவா "ஏ" ஷெட்டியூல் சொத்தை காலியாக வாதி வசம் ஒப்புவிக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடப்பட்டு வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

3. தாவா "பி" ஷெட்டியூலை பொறுத்து வாதிக்கு 1/2 பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்று வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

4. தாவா செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

5. வாதியின் செலவுத்தொகை ரூ.2356/-யை வாதி ஏற்றுக்கொள்ளவேண்டும்.

6. பிரதிவாதிகளின் செலவுத்தொகை ரூ.1510/யை பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

| **இருதரப்பிலும் செலவுத்தொகைப் பட்டியல்** | | |
|---|---|---|
| வாதி | | எதிர்வாதிகள் |
| பிராது கட்டணம் | 851 | - |
| வக்காலத்து | 5 | 10 |
| எழுத்துக்கூலி | 50 | 50 |
| வழக்கறிஞர் ஊதியம் | 1450 | 1450 |
| மொத்தம் | 2356 | 1510 |

**<u>சொத்து விவரம்</u>**

**<u>தாவா ஏ செட்டியூல்</u>**

சங்கராபுரம் வட்டம், அருளம்பாடி கிராமத்தில் உள்ள நத்தம் பட்டா எண் 98ல் நத்தம் சர்வே எண் 107/6ல் 0.0.76 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள காலிமனை மதிப்பு ரூ.10,000/-

**<u>தாவா பி செட்டியூல்</u>**

**சங்கராபுரம் வட்டம் அருளம்பாடி கிராமத்தில்**

1. அபுச எண் 6/3 0.05.0 ஏர்ஸ் இதிலுள்ள கிணறு மின் இணைப்பு எண் 55ல் உள்ள பம்புசெட் உள்பட தீர்வை ரூ.0.24 மதிப்பு ரூ.10,000.00
2. அபுச எண் 6/1ல் 0.06.0 ஏர்ஸ் தீர்வை 0.25 பைசா
3. அபுச எண் 6/2ல் 0.01.0 ஏர்ஸ் தீர்வை 0.06 பைசா
4. அபுச எண் 6/4ல் 0.02.5 ஏர்ஸ் தீர்வை 0.12 பைசா
5. அபுச எண் 6/5ல் 0.00.5 ஏர்ஸ் தீர்வை 0.18 பைசா
6. அபுச எண் 6/7ல் 0.09.5 ஏர்ஸ் தீர்வை 0.44 பைசா

2019-ம் ஆண்டு டிசம்பர் 06-ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற இலட்சினையும் இட்டுத் தரப்பட்டுள்ளது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கராபுரம்.